பெயார்பஸ்ட் காப்புறுதி லிமிடட்
(நிறுவனம் இலக்கம் : PB5180)
எக்சஸ் டவர் II (14 ஆம் மாடி),
278/4, யூனியன் இடம், கொழும்பு 02, இலங்கை
தொடர்பு இலக்கம் :+94 11 2428428 |
தொலைநகல் :+94 11 2438438
மின்னஞ்சல் : info@fairfirst.lk |
இணையதளம் : www.fairfirst.lk

**காப்புறுதி பத்திர தகவல் ஆவணம் (IPID)**

## சொத்துக்கள் பாதுகாப்பு காப்புறுதிப் பத்திரம்

### 1. காப்பீட்டு விடயதானம்

சொத்துக்கள் பாதுகாப்பு காப்புறுதிப் பத்திரமானது, வியாபாரங்களுக்காக வடிவமைக்கப்பட்ட சம்பூரண பொதியாகும். அது உங்களது பௌதீக சொத்துக்கள், வருமான வழிகள், இலத்திரனியல் உபகரணங்கள் என்பனவற்றைப் பாதுகாப்பதற்காக பல்வகையான காப்புறுதிகளை ஒன்றிணைப்பதோடு, உங்களது சட்டபூர்வ பொறுப்புக்களையும் காப்பீடு செய்கின்றது.

### 2. காப்பீடு செய்யப்பட்டவை யாவை?

இக்காப்புறுதிப் பத்திரமானது, பல அம்சங்களை காப்பீடு செய்யும் பொதியொன்றாகும். உங்களது குறிப்பான காப்பீடும், ஒவ்வொரு அம்சத்துக்குமுரிய வரையறைகள் உங்களது காப்புறுதி அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

### சொத்து – பிரிவு 1

தீ, மின்னல், புயல், சூறாவளி, வெள்ளம், நிலநடுக்கம், தண்ணீர் தாங்கிகள் மற்றும் குழாய்கள் வெடித்தல் அல்லது வெளியேற்றம், (பலாத்கார நுழைதல்/வெளியேறல் சம்பந்தப்பட்ட) களவு முதலியன.

நிலையான கண்ணாடிகள் உடைதல், இடிபாடுகளை அகற்றல், கோரிக்கையொன்றின் பிறகு சிற்பவரைஞர்கள் மற்றும் மதிப்பீட்டாளர்களின் செலவினங்கள் போன்ற பல இலவசமான வியாபகங்களை உள்ளடக்கியது.

### வியாபார இடையூறு – பிரிவு 2

சொத்து பிரிவின் கீழ் காப்பீடு செய்யப்பட்டள்ள சேதத்தின் காரணமாக உங்களது வியாபாரத்துக்க இடையூறு ஏற்பட்டால், மொத்த இலாப இழப்பு மற்றும் சம்பளம், வாடகை போன்று குறித்துரைக்கப்பட்ட செலவினங்களை, உடன்பட்ட காலத்துக்கு, நாம் காப்பீடு

செய்வோம். இடையூறின் போது இது உங்களுக்கு ஆதரவளிப்பதற்கு துணை புரிவதோடு, இலகுவான மீட்சிக்கும் வழியமைக்கின்றது/.

**பணம் – பிரிவு 3**

உங்களுடைய வளாகங்கள், பூட்டப்பட்டிருந்து காப்பகம், வங்கிக்கும் வங்கியிலிருந்தும் கொண்டு செல்லல் உட்பட பல்வேறு நிலைமைகளில் (பணம், காசோலை போன்ற) உங்களுடைய பண இழப்பை நாம் காப்பீடு செய்வோம்.

**இலத்திரனியல் உபகரணங்கள் – பிரிவு 4**

கணணி மற்றும் சேவையகம் போன்ற உங்களுடைய இலத்திரனியல் உபகரணங்களுக்கு ஏற்படும் எதிர்பாரா மற்றும் திடீர் பௌதீக இழப்பு அல்லது சேதங்களுக்கு நாம் "சகல ஆபத்து" காப்பீடு வழங்குவோம்.

**வேலையாட்கள் நட்டஈடு – பிரிவு 5**

அவர்களுடைய வேலையினால் உங்களது வேலையாட்கள், எதேச்சையான காயம் அல்லது நோய்க்கு ஆளானால், அவர்களுக்கு நட்டஈடு செலுத்த வேண்டிய சட்டபூர்வ பொறுப்பை நாம் காப்பீடு செய்வோம்.

**பொது மக்கள் பொறுப்பு – பிரிவு 6**

உங்களுயை வர்த்தகத்தின் நிமித்தம் உங்களது வளாகத்தில் வைத்து (வாடிக்கையாளர் போன்ற) மூன்றாம் தரப்பினர் எதேச்சையான காயம் அல்லது சொத்து சேதத்துக்கு ஆளானால், அதனால் விளையக் கூடிய சட்டபூர்வ பொறுப்பை நாம் காப்பீடு செய்வோம்.

**பற்றுறுதி உத்தரவாதம் – பிரிவு 7**

உங்களது வேலையாட்களின் செயலினால் உங்களது வியாபாரத்துக்கு ஏற்பட்ட நேரடி நிதி இழப்பை நாம் காப்பீடு செய்வோம்.

## 3. காப்பீடு செய்யப்படாதன யாவை? (ஒரே பார்வையில்)

சொத்தானது அதனுடைய முழு பிரதியீட்டு பெறுமானத்தை விடவும் குறைவாக காப்புறுதி செய்யப்பட்டிருந்தால், ஏதும் கோரிக்கை செலுத்துமதியானது விகிதாசாரப்படி குறைக்கப்படும்.

கிரமமான சிதைவு, தேய்மானம் அல்லது சாதாரண மதிப்பிறக்கத்தினால் விளையும் இழப்பு அல்லது சேதம்.

இலத்திரனியல் உபகரண பிரிவின் கீழ் இலத்திரனியல் உபகரணங்களின் களவு காப்பீடு செய்யப்பட்டில்லை. பிரயோகமாகத்தக்க காப்புறுதி நியதிகள் நிபந்தனைகளுக்குட்பட்டு,

பலாத்கார மற்றும் வன்முறை புகுதலினால் ஏற்படும் களவு சொத்து பிரிவின் கீழ் காப்பீடு செய்யப்படலாம்.

இலத்திரனியல் உபகரணங்களில் சேமிக்கப்பட்டுள்ள மென்பொருட்கள், நிரல்கள் அல்லது தரவுகளின் இழப்பு அல்லது சேதம் காப்பீடு செய்யப்பட்டில்லை.

காப்புறுதிப் பத்திரத்தில் பற்றுறுதி உத்தரவாதப் பிரிவு உள்ளடக்கப்பட்டிருந்தாலன்றி வேலையாட்களின் நேர்மையீனத்தினால் ஏற்படும் இழப்பு காப்பீடு செய்யப்பட்டில்லை.

**4. காப்புறுதிக் கட்டணம் செலுத்துகை**

பொதுவாக ஒரு வருட காலமாகிய காப்புறுதிக் காலத்துக்கு ஒரே செலுத்துகையில் செலுத்தப்பட வேண்டும்.

**5. காப்புறுதி பெறுனரின் கடப்பாடுகள்**

இதே சொத்தை வேறேதும் காப்புறுதிப் பத்திரங்கள் காப்பீடு செய்யுமாயின் அவற்றின் விபரம் உட்பட, வியாபாரத்தையும் காப்புறுதி செய்யப்பட்ட சொத்துக்களையும் பற்றிய சரியானதும் சம்பூரணமாமதுமான தகவல்களை வழங்கப்பட வேண்டும்.

காப்புறுதி செய்யப்பட்ட சொத்துக்கள் நல்ல நிலையில் பேணப்பட வேண்டியதுடன், பூட்டு போன்ற உசிதமான பாதுகாப்பு நடவடிக்கைகள் உபயோகத்தில் இருக்க வேண்டும். இழப்பு அல்லது சேதத்தை தவிர்ப்பதற்கான எல்லா நியாயமான முன்னெச்சரிக்கை செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

பொறுப்புக்களை அதிகரிக்கச் செய்யத்தக்க, வர்த்தக செயற்பாடுகளில் ஏதும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் அல்லது தொடர்ச்சியாக 30 மேல் குடியிருக்காத வளாகங்கள் பற்றி பயார்பஸ்ட் இன்சூசன்சுக்கு உடனடியாக அறிவிக்க வேண்டும்.

கோரிக்கை முன்வைக்கத் தக்க சம்பவமொன்றின் போது, காப்புறுதி செய்யப்பட்ட சொத்துக்களுக்கு மேலும் இழப்புகள், சேதத்தை தவிர்ப்பதற்கான எல்லா நியாயமான முன்னெச்சரிக்கை செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட வேண்டும். கோரிக்கையை மதிப்பீடு செய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள யாரும் மதிப்பீட்டாளர்கள், இழப்பு இயைபாக்குனர்கள் அல்லது விசாரணையாளர்களுடன் முழுமையான ஒத்துழைப்பும் எதிர்பார்க்கப்படுகின்றது.

ஏதும் இழப்புக்களும் சேதங்களும் உடனடியாக பயார்பஸ்ட்டுக்கு அறிவிக்கப்பட வேண்டியதுடன், சம்பவத்தின் 14 நாட்களுக்குள் பூரணப்படுத்தப்பட்ட கோரிக்கை படிவம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

## 6. முறைப்பாடுகளையும் இன்னல்களையும் கையாள்தல்

**படிமுறை 1 – பெயார்பஸ்ட் இன்சூரன்ஸோடு தொடர்பு கொள்ளவும் –**

☎+94 11 2428282 (மு.ப. 8.30 தொடக்கம் பி.ப. 5.00 வரை) | ✉ – info@fairfirst.lk

உங்கள் விடயங்களை பெயாபஸ்ட்டின் பொறுப்பு & இணக்க குழுவுக்கு கொண்டு செல்லலாம்.

**படிமுறை 2 – (தீர்க்கப்படா விடின்) புறக் கொண்டு செல்லல் –**

- இலங்கை காப்புறுதி சீர்படுத்தல் ஆணையம் (IRCSL)

☎ +94 11 2335167 | ✉ info@ircsl.gov.lk | 🌐 www.ircsl.gov.lk

- காப்புறுதி குறைகேள் அதிகாரி

☎ +94 11 2505542 / +94 11 2505041 | ✉ info@insuranceombudsman.lk |

🌐 www.insuranceombudsman.lk

## 7. மேலும் தகவலுக்கு எம்மை தொடர்பு கொள்ளவும் –

**பெயார்பஸ்ட் இன்சூரன்ஸ் லிமிடட்**

எக்சஸ் டவர் II (14 ஆம் மாடி), இல.278/4, யூனியன் இடம், கொழும்பு 02, இலங்கை

☎+94 11 2428428 | ✉ info@fairfirst.lk | 🌐 www.fairfirst.lk

**முக்கிய குறிப்பு** – பிரதான காப்பீடு மற்றும் அவசியமாயின், மேலதிக காப்பீடுகளினதும் சாராம்சம் ஒன்றை வழங்குவதே இந்த **IPID** இன் குறிக்கோளாகும். இது உங்களது குறிப்பான தனிநபர் பிரத்தியேக தேவைகளுக்கானதல்ல. முழுமையானதும் பிரத்தியேகமானதுமான தகவல்களை, ஒப்பந்தத்துக்கு முந்திய மற்றும் ஒப்பந்த நியதிகளில் பூரணப்படுத்தவும். உற்பத்தியின் விடுகைகள், உங்களது காப்புறுதி பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. **IPID** யானது, காப்புறுதியின் / ஒப்பந்தத்தின் அங்கமாகாது. எனவே, ஏதும் சச்சரவின் போது, காப்புறுதி பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகளும் நிபந்தனைகளுமே மேலோங்கியிருக்கும்